International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 02 Issue: 03 July to August 2020 www.irjtsjournal.org

# சங்க இலக்கியத்தில் ஆயர்கள்

**முனைவர் பீ.பெரியசாமி,**

*தமிழ்த்துறைத்தலைவர்,*

*டி.எல். ஆர். கலை மற்றும் அறிவியல் கல்லூரி,*

*விளாப்பாக்கம், இராணிபேட்டை மாவட்டம் -632521.*

*தமிழ்நாடு, இந்தியா.*

## ஆய்வுச்சுருக்கம்

இந்தியச் சமூகம் பல்வேறு இனக்குழுக்களின் பண்பாடுகளை உள்ளடக்கியதாக விளங்குகிறது. தமிழ்ச் சமூகமும் இத்தகைய போக்கைக் கொண்டிருப்பதைச் சங்க இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன. குறிஞ்சித் திணை வாழ்வியல் வேட்டைச் சமூகத்தை எடுத்துக்காட்டுவதுபோல், முல்லைத் திணை வாழ்வியல் மேய்ச்சல் சமூகத்தை எடுத்துக்காகட்டுகிறது. இம் முல்லைத் திணை வாழ்வியலுக்கு உரியவர்களாக இடையர்கள் திகழ்கின்றனர். சங்க இலக்கியச் சான்றுகளைவைத்துப் பார்க்கும்பொழுது ஆயர் இனத்தார் அல்லது இடையர் இனத்தார் பாண்டிய பரம்பரையைச் சார்ந்தவர்கள் என்பது தெளிவாகிறது. இதே இனத்தைச் சார்ந்தவர்கள் சிலர் இனக்குழுத் தலைமை ஏற்று ஆட்சிசெய்தையும் சங்க இலக்கியத்தின்வழி அறியமுடிகிறது.

**முக்கியச்சொற்கள்**

**சங்க இலக்கியம், ஆயர்கள், வேட்டையாடுதல், பசுக்கள் வளர்தல், போர் செய்தல், பயிரிடுதல், வாழ்க்கைமுறை, முல்லை நிலம், காவல், ஏறுதழுவுதல்.**

### முன்னுரை

இந்தியச் சமூகம் பல்வேறு இனக்குழுக்களின் பண்பாடுகளை உள்ளடக்கியதாக விளங்குகிறது. தமிழ்ச் சமூகமும் இத்தகைய போக்கைக் கொண்டிருப்பதைச் சங்க இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன. குறிஞ்சித் திணை வாழ்வியல் வேட்டைச் சமூகத்தை எடுத்துக்காட்டுவதுபோல், முல்லைத் திணை வாழ்வியல் மேய்ச்சல் சமூகத்தை எடுத்துக்காகட்டுகிறது. இம் முல்லைத் திணை வாழ்வியலுக்கு உரியவர்களாக இடையர்கள் திகழ்கின்றனர்.

### சங்க இலக்கியத்தில் இடையர் வாழ்க்கைமுறை

உலகில் பழமையான மொழிகளும் இலக்கியங்களும் இருந்தாலும் உலகச் செம்மொழி இலக்கியங்களுள் தனித்தன்மைவாய்ந்த சிறப்புக் கூறுகளை நம் பழந்தமிழ் இலக்கியங்களான சங்க இலக்கியங்களில் காணமுடிகின்றது. திணை அமைப்பு முறையானது பழந்தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடத்தக்கதாக விளங்குகிறது. தொல்காப்பியத்தில் நிலத்தை நான்கு வகையாகப் பகுத்து முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என நானிலமாகப் பெயரிடப்பட்டுள்ளது. மழையற்ற காலங்களில் 'முல்லையும் குறிஞ்சியும்' முறைமையில் திரிந்து நல்லியல்பு இழந்தது என்பது இளங்கோவடிகளின் கருத்தாகும். குறிஞ்சிநிலத்திற்குரிய தொழில்களாக வேட்டையாடுதல், தினை விதைத்தல், கிழங்கு அகழ்தல், தேன் எடுத்தல் முதலியன சுட்டப்பெற்றுள்ளன. முல்லை நிலத்திற்குரிய தொழில்களாகக் கால்நடை மேய்த்தல் ஆகியவை குறிப்பிடப்பெற்றுள்ளன. மருதநிலத்திற்குரிய தொழிலாக வேளாண்மை, ஆகியவை கூறப்பெற்றுள்ளது. நெய்தல் நிலத்திற்குரிய தொழில் மீன்பிடித்தலாகும். இவ்வாறு ஒவ்வொரு நிலத்திற்கும் வெவ்வேறு தொழில்கள் குறிப்பிடப்பெற்றுள்ளன. இவை அனைத்தும் உணவுதேடுதலுக்கான தொழில்களேயாகும்.

**முல்லை நிலமும் கால்நடை மேய்ப்பவரும்**

காடும் காடும் சார்ந்த பகுதியும் முல்லை என அழைக்கப்பெறுகிறது. இவர்களது தொழில் கால்நடை மேய்த்தல் என்ற அடிப்படையில் அதற்கு ஏற்ற மேட்டுப்பாங்கான நிலமாக இந்நிலம் திகழ்கிறது. இரண்டாயிரம் ஆண்டுகள் பழமையான சங்க இலக்கியத்துள் ஆயர் சமூகத்திற்கென்றே ஒரு தனித்திணை வரையறுக்கப்பெற்றுள்ளதிலிருந்து இந்த சமூகத்தினரின் பழமையை அறிந்துகொள்ள முடியும். முல்லைநிலத்தில் கால்நடை மேய்க்கும் தொழில் செய்தவர்கள் இடையர், ஆயர், கோவலர் எனப் பலவாறு அழைக்கப்பெறுகின்றனர். கால்நடைமேய்ப்போரைக் குறிக்கும் பெயர்களாக,

**“முல்லையர், கோவலர், இடையர்**
**(சொல்லிய) வண்டர், தொறுவர், கோவிந்தர்**
**அண்டர், கோபாலர், ஆயர், அமுதர் என்று**
**இங்கு இவை முல்லை நிலத்தவர் பெயரே”** (திவாகர நிகண்டு, ப.16)

என்று திவாகர நிகண்டு குறிப்பிடுகின்றது. மேற்கண்ட பெயர்களைத் திவாகரன் நிகண்டு சுற்றினாலும்கூட பிற்காலத்தில் இவர்கள் அம்பலக்காரர், கரையாளர், கீதாரி, கோனார், சேர்வை, தாஸ், நாயுடு, பிள்ளை, மணியக்காரர், மந்தடி, மந்திரி, முக்குந்தர், ரெட்டி, அண்டர், ஆவியர், குறும்பர், பூழியர், வேளிர் என்ற பட்டப் பெயர்களோடு அழைக்கப்பெறுகின்றனர் என்பர் ஆய்வாளர். (வில்லிபுரம் மகேஸ்வரன், சோழர் காலத்துக் கோயிலும் சமூகமும்,ப.141 -142) சங்க இலக்கியம் முழுவதிலும் கால்நடை மேய்ப்போரைக் குறிக்கும் சொற்களாக அண்டர், ஆயர், இடையர், கோவலர், பொதுவர், தொறுவர் போன்ற சொற்கள் பன்முறை பயின்றுவந்துள்ளதைக் காணமுடிகிறது. இவர்களது தொழில்முறையும் வாழ்க்கைமுறையும் முல்லைத்திணைப் பாடல்களில் விரவிக்கிடப்பதைக் காணமுடிகின்றன.

**ஆயர்களின் உருமும் செயல்களும்**

கால்நடை மேய்க்கும் கோவலர்கள் தங்களது பசுக்களின் கழுத்தில் மணி கட்டியிருப்பர். இவர்கள் மாலையில் இல்லம் திரும்புபோது செவ்வழிப்பண்ணைப் பாடிக்கொண்டும், குழல் ஊதிக்கொண்டும் திரும்பி வருவர் என்பதை,

**“………………… விடைப்**
**படுசுவரற் கொண்ட பகுவாய்த் தெண்மனி**
**யாபெயர் கோவலர் ஆம்ப லொடளைஇப்**
**பையுள் நல்யாழ் செவ்வழி வகுப்ப**
**வாருயிர் அணங்குந் தெள்ளிசை**
**மாரி மாலையந் தமியள் கேட்டே”** (அகம், பா.214)

என்ற பாடல் குறிப்பிட்டுள்ளது.

கோவலர்கள் கையில் கோல் உடையோராகவும் முசுண்டை, வெண்காந்தள் ஆகிய பூக்களால் தொடுக்கப்பட்ட மாலையை அணிந்தவராகவும் இருந்துள்ளனர். (மேலது, பா.264) ஆடுகளை அடைத்துவைத்திருக்கும் இடம் ‘குறும்பு’ எனப்பட்டுள்ளது. மழைபெய்யும் இரவுகளில் செம்மறி ஆட்டுத் தொகுதிகளைப் பாதுகாப்பதற்காக ஆயர்கள் குறும்புகளில் தங்கி இருந்துள்ளனர். கையில் வைத்திருக்கும் கடைக்கோலில் இருந்து தீ உண்டாக்கி விலங்குடமிருந்து ஆடுகளையும் தங்களையும் பாதுகாத்துக் கொண்டுள்ளனர். வலிய நரம்பினால் ஆன உளியையும் பானையையும் தோல்படுக்கையையும் வைத்திருந்துள்ளனர். இரவுநேரங்களில் விலங்குகள் வராமல் இருக்க சீழ்க்கை ஒலி எழுப்பியுள்ளனர். (மேலது, பா.274)

இடையர்கள் உறியோடு தீக்கடைக் கோலைக் பாதுகாப்பாக வைத்திருப்பதற்குத் தோலாலான பையை வைத்திருந்துள்ளனர். கால்நடைகளின் வழிக்கிடைக்கும் பாலை விற்பனைசெய்துள்ளனர். (நற், பா.142) ஆட்டின்

தொகுதிகளைப் பாலைநிலப் பகுதியில் மேய்த்துள்ளனர். (மேலது, பா.169) இரவில் கொல்லையிலிருந்து கோவலர்கள் பெரிய மரத்தின் வேரடிக்கட்டையில் கொள்ளிவைத்துக் குளிர்காய்ந்துள்ளனர். (மேலது, பா.289)

**மந்தைக்குக் காவல்**

ஆட்டுமந்தைகளைப் பாதுகாக்கும் இடம் வீட்டிலிருந்து தனியாகவே இருந்துள்ளது. இரவில் ஆட்டு மந்தைக்காவலில் ஈடுபட்டிருப்போர் முல்லைப் பூவைச் சூடிக் கொண்டிருந்துள்ளனர். கால்நடைகளின்வழிக் கிடைக்கும் பாலைக் கொணர்ந்து காலையில் வீட்டில் கொடுத்துவிட்டு தங்கள் உணவான கூழைப் பெற்றுச் சென்றுள்ளனர். (குறு, பா..221) வேட்டைச் சமூகத்திலிருந்து கால்நடைகளைப் பழக்கி அவற்றை மேய்ப்பதையே தொழிலாகக் கொண்ட ஆயர்கள் கால்நடை மேய்த்தலோடு மட்டும் இருக்கவில்லை. கால்நடைச் சமூகத்திற்கு அடுத்துத் தோற்றம் கொண்ட வேளாண் சமூகத்து உழவுத்தொழிலுக்கும் இவர்களே அடித்தளம் இட்டுள்ளனர். மழைபெய்யும் காலங்களில் நிலத்தைச் சீர்படுத்தி வரகு பயிரிட்டனர் என்பதைச் சங்க இலக்கியத்தில் காணமுடிகின்றது. (நற், பா.121)

**பெரும்பாணாற்றுப்படை காட்டும் இடையர் இல்லம்**

எட்டுத்தொகை நூல்களில் முல்லைத்திணைப் பாடல்கள் தனிப்பாடல்களாக இடம்பெற்றுள்ளன. பத்துப்பாட்டு நூல்களில் ‘முல்லைப்பாட்டு’ என்ற தனி நூல் இடம்பெற்றுள்ளது. ஆனாலும், முல்லை நில ஆயர்வாழ்க்கையை அவை முற்றும் முழுதாகக் குறிப்பிடவில்லை. அதேநேரத்தில் பிற ஆற்றுப்படை நூல்களில் ஐந்து நிலத் தன்மைகளும் அந்நில மக்களது வாழ்க்கையும் கூறப்பெறும் இடங்களில் ஆயர்களின் வாழ்க்கையும் ஓரளவிற்குச் சுட்டப்பெற்றுள்ளது. குறிப்பாக, பெரும்பாணாற்றுப்படை, ஆயர்களின் இல்லத்தை அப்படியே காட்டியுள்ளது. இடையர் இல்லத்தில் ஆட்டுக் குட்டிகள் தழை உண்பதற்காகச் சிறிய கால் ஊன்றப்பட்டிருக்கும். அவர்களது இல்லம் சிறிய நுழைவாயிலைக் கொண்டிருக்கும். கூரை வரகுக்கற்றையால் வேயப்பட்டிருக்கும். அவ்விடத்தில் கிடாய்த்தோலால் ஆன படுக்கையும் இருக்கும். நெடிய நரம்புகள் கட்டிய முற்றத்தை உடையதாய் இருக்கும். அவ்வூரில் செம்மறி ஆடும், வெள்ளாடும் காட்டுமுள்ளாலாகிய வேலியினுள் அடைக்கப்பெற்றிருக்கும். (பெரும்பாணாற்றுப்படை, பா.அடி.147-180) என முல்லைநிலத்து ஊரும் இல்லமும் காட்டப்பெற்றுள்ளன. விடியற்காலைப் பொழுதில் எழுந்து ஆயர்மகளிர் புலி உறுமுவது போன்று தயிர்கடைந்து பூவால் ஆன சும்மாட்டைத் தலையில்கொண்டு மோர்ப்பானையை வைத்து விற்கச்செல்வர். மோருக்கு மாற்றாக நெல்லைப்பெற்றுவருவர். நெய்க்கு மாற்றாகப் கட்டிப்பசும் பொன்னைக் கொடுத்தாலும் பெறமாட்டார்கள். அவற்றிற்கு மாற்றாகப் பால் எருமையையும், கரிய எருமையினையும் பெறுவர் (மேலது, பா.அடி. 47-180) எனக் பெரும்பானாற்றுப்படை குறிப்பிட்டுள்ளது.

**இடையர் செயல்பாடுகள்**

இடையர்களின் கால் செருப்பணிந்து அதனால் வடு விழுத்திருக்கும். கைகளில் மரங்களை ஒடித்தெறியும் கோடாரி பிடித்ததால் கைகளும் தழும்பு பெற்றிருக்கும். தோலில் உறிகளைத் தொங்கவிடுவதால் தோலிலும் தழும்பு ஏறியிருக்கும். இடையர்கள்மீது பால்மணம் வீசிக்கொண்டிருக்கும். அவர்கள் கதம்பமாகிய மாலையையும், ஒன்றாய்ப் பொருந்திய ஆடையினையும் அணிந்திருப்பர். காட்டிலே பசுக்களோடு தங்கியிருக்கும்போது தீக்கடைக் கோலைக்கொண்டு குழலில் துளையிட்டு இனிய குறிஞ்சிப் பண்ணைப் பாடுவர். (மேலது, பா.அடி.147-180) இவ்வாறான பதிவுகள் முல்லைப்பாட்டில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

முல்லைத் திணைப் பாடல்களில் மட்டுமின்றிச் சில பாலைத் திணைப் பாடல்களிலும் இடையர்களின் வாழ்க்கைக் குறிப்பிடப்பெற்றுள்ளது. பசு நிரைகள் மிகுதியாக உடைய இடையர்கள், வரகுக்கதிர்களை மாடுகளைக் கொண்டு துவைத்துத்தர, அவர்தம் மகளிர் அதனைப் பாறைகளில் குவித்து அரிசியாக்கிப் புடைத்துச் சுனைநீரைக் கொண்டு சோறாக்கி வழிச்செல்லும் புதியவர்களுக்கு வழங்குவர்( அகம், பா.393)

என்பதை ஒரு பாடல் குறிப்பிட்டுள்ளது. பசுநிரைகளைப் பாதுகாக்கும் ஆயர், அவற்றிற்கு நீர்தேக்கி வைப்பதற்காகப் பரல்மிகுந்த கற்களுள்ள பள்ளத்தில் கணிச்சியாற் குழி தோண்டி நீரைப் பாதுகாப்பர்( நற், பா.240) என்ற மற்றொரு சங்கப்பாடல் குறிப்பிட்டுள்ளது.

**இடையர் இனத்தாரும் போர் மரபினரும்**

சங்கஇலக்கிய முல்லைப் பாடல்களில் இடையர்களின் வாழ்க்கைமுறை பதிவு செய்யப்பெற்றுள்ளது என்றாலும் இந்த ஆடுமாடு மேய்க்கும் தொழில்செய்வோர் பாடல்களில் நாயகர்களாக வைக்கப்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்தத் தொழிலிருந்து மாறுபட்டவர்களே பாடல்களில் தலைவர்களாக வைக்கப்பெற்றுள்ளனர். முல்லைத் திணைக்குரிய உரிப்பொருள் இருத்தலும் இருத்தல் நிமித்தமும் என்பதாகும். இந்த உரிப்பொருளுக்கு ஏற்பப் போருக்குச் சென்ற தலைவன் திரும்பி வரும்வரை அவனுக்காகத் தலைவி காத்துக்கொண்டிருப்பதே ‘இருத்தலாக’ குறிப்பிடப்பெற்றுள்ளது. சங்க இலக்கிய முல்லைத் திணைப்பாடல்கள் அனைத்தையும் ஆய்வுக்கு உட்படுத்திப் பார்க்கும்பொழுது அவற்றின் தலைவர்கள் அனைவரும் போர்மேற்செல்வோராகவே காட்டப்பெற்றுள்ளனர். (செல்வராசு.,அ. சங்க இலக்கியத்தில் குடிமக்களும் தலைமக்களும், பக். 50 – 51) போருக்குச் சென்ற தலைவன் கார்காலத்தில் திரும்புவதாகக் கூறிச்செல்வான். கார்காலம் என்பது போர்செய்வதற்கு ஏற்ற காலம் அன்று. எனவே அவன் கார்காலத்தில் திரும்புவதாகச் சொல்லிச் செல்வான். அவன் வரும்வரை காத்திருக்க வேண்டியது தலைவியின் இல்லறப் பண்பாகும். கார்காலம் வருவதற்கான அறிகுறி மழைபெய்தலும் முல்லைப் பூத்தலும் ஆகும். இதனைப் பார்த்து தலைவி வருந்துவாள். தோழி அவளைத் தேற்றுவாள். இதுதான் முல்லைத் திணைப் பாடற் தன்மையாகும். ஒருசில பாடல்களில் மட்டும் போர்மேற் சென்று திரும்பும் தலைவன் இடைச்சுரத்தில் பேசுவதாகப் பாடப்பெற்றுள்ளன.

சங்கஇலக்கிய நூல்களுள் முல்லைக்கலி மட்டும் இத்தன்மையிலிருந்து சிறிது மாறுபடுகின்றது. பிற அனைத்து முல்லைத் திணைப் பாடல்களும் ஒரே மாதிரித்தான் உள்ளன. தலைவன் திரும்பிவருவதும் மாலைநேரத்தில் கோவலர்கள் கால்நடைகளை ஓட்டிக்கொண்டு வீட்டிற்குவருவதும் முல்லைத் திணைப்பாடல்களில் இணைத்துப் பேசப்பெற்றிருப்பதைக் காண முடிகின்றது. போருக்குச் சென்றுதிரும்பும் தலைவர்களாக முல்லைத்திணைப் பாடல்களில் காட்டப்பெற்றுள்ளவர்கள் தேரில் திரும்புவர்களாகவே காட்டப்பெற்றுள்ளனர். அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு ஆகிய நான்கு நூல்களிலும் உள்ள 66 பாடல்களில் தேரில் திரும்பும் தலைவர்கள் வெளிப்படையாகக் குறிப்பிடப்பெற்றுள்ளனர். 28 பாடல்களில் பாசறையில் தங்கியிருக்கும் தலைவர்கள் சுட்டப்பெற்றுள்ளனர். (மேலது, ப.50)

போருக்கச் சென்றிருக்கும் தலைவர்களை இருவகையினராகப் பார்க்க முடிகிறது. ஒரு வகையினர், தாமேதலைமை ஏற்று போருக்குச் சென்றவர்கள். மற்றொரு வகையினர் பிற மன்னர்களுக்காகப் போருக்குச் சென்றவர்களாவர். இந்த இருவகையினரையும் முல்லைத் திணைப்பாடல்கள் தலைவர்களாகக் காட்டியுள்ளன. இதனைவைத்துப் பார்க்கும்பொழுது முல்லை நிலத்திலிருந்து போர்மறவர்களாக இருந்தவர்களை இனக்குழுத் தலைவர்கள் என்றும் போர்வீரர்கள் என்றும் இனங்கண்டுகொள்ள முடிகின்றது. ஆரியர்கள் இந்தியாவின் உள்ளே நுழைந்தபோது யாதவர்கள் எனப்பட்ட இடையர்கள் அவர்களை எதிர்த்துப் போர் புரிந்தனர் (லோகநாதன்.,C.P., வரலாற்றில் யாதவர்கள்,பக். 15 – 16) என்ற குறிப்போடு இதனை ஒப்பிட்டு நோக்க வடமாநிலங்களில் வாழ்ந்த இடையர்கள் மட்டுமல்லாமல் தமிழ்நாட்டில் இருந்த இடையர்களும் வீரம் மிகுந்தவர்களாகவே இருந்துள்ளனர் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கதாக உள்ளது.

**ஆயர்களின் உணவு சேகரித்தல்**

வேட்டையாடி உணவு சேகரிக்கும் இனக்குழு வாழ்வில் சேகரித்தல் (Gathering) மிக முக்கியமானதாகும். “வேட்டையாடுதல், மீன்பிடித்தல், காட்டில்கிடைக்கும் காய்கனிகள், கொட்டை வகைகள், தேன், பிற உண்ணும் பொருள்களைச் சேகரித்தல், மரப்பட்டைகள்,நார், மரப்பொருட்கள் போன்றவற்றைச்

சேகரித்துமற்ற மக்களுக்கு கொடுத்து அவர்களிடமிருந்து தேவையான பொருட்களைப்பெறுதல் ஆகியவை மூலம் உணவுத் தேவைகளை ஈட்டும் முறையை வேட்டையாடி உணவு சேகரித்தல் முறையாகும்.'' (பக்தவதசல பாரதி, பண்பாட்டு மானிடவியல், ப.464) பெரும்பாலும் இதனைப் பெண்களே செய்தனர். எனினும் கிழங்ககழ்தல், தேனிழைத்தல் ஆகியவற்றில் ஆண்களுங்கூட பங்கேற்றனர் என்பதைப் பாடல்கள் மூலம் அறிய முடிகிறது.

**முன்றில் சிறுநிறை நீர்கண்டு உண்ணும்**
**புன்புலம் தழீஇய பொறைமுதல் சிறுகுடித்**
**திணைகள் உண்ட தெறிகோல் மறவர்**
**சிசைத்த வில்லர் வேட்டம் போகி**
**முல்லைப் படப்பைப் புல்வாய் கெண்டும் (அகம்.284,6-10)**

முல்லை நிலஞ்சூழ்ந்த குன்றின் அடிவாரத்தில் உள்ள சிற்றூரில், தெறித்து எய்யும் அம்பினையும் அழுத்து கட்டிய நாணயுடைய வில்லையும் உடைய மறவர்கள் திணைக்கொண்டு சமைத்த கள்ளினை உண்டு, வேட்டைமேற் சென்று முல்லை நிலத்தோட்டத்தில் மானை அறுத்துத் தின்பர்.

**உடும்பு கொலீய வரிநுணல் அகழ்ந்து**
**நெடுங் கோட்ப் புற்றத்து ஈயல் கெண்டி**
**எல்லு முயல் எறிந்த வேட்டுவன் சுவல (நற்.59,1-3)**

என்னும் நற்றினை பாடலில் உடும்பினைக் கொன்றும், வரித்த தவளையினை அகழ்ந்து எடுத்தும் புற்றுகளில் உறைந்துள்ள ஈசல்களை தோண்டி எடுத்தும் பகலில் முயல்களை வேட்டையாடியும் வாழும் வேடவன். இவ்வாறே பகற்பொழுதிலே திறந்த வாயையுடைய வேட்டை நாயுடன் கானகம் சென்றுவேலிகளில் வலையை மாட்டி வைத்துப் பசிய புதர்களிலிருந்து முயல்களை வெளிப்படச் செய்து அகப்படுத்துவர். ஆதன் இறைச்சியை விரும்பியுண்டனர் (பெரும்பாண்.111-116). வேட்டையாடி உணவு சேகரித்த இவர்கள் வேடர் குடியினர் என்று பொதுவாக அழைத்தனர். வில், அம்பு, கவண், வலை,கண்ணி முதலிய கருவிகளுடன் வேட்டை நாயின் உதவியுடன் காடுகளிலும் மலைகளிலும் யாருக்கும் பாதிப்பில்லாமல் வேட்டையாடினர். காடுபடு பொருட்களைச் சேகரித்து உண்டனர். இவர்களுடைய ஆயதங்களில் வில் முதன்மையான இடம்பெற்றிருந்ததால் இவர்களைப் புலவர்கள் வில்லோர் உழவர் என்று குறிப்பிட்டனர்.'' (பக்தவதசல பாரதி, இலக்கிய மானிடவியல், ப.56). இத்தகைய வேட்டையாடி உணவு சேகரித்த நிலையிலிருந்து வேட்டையாடி உணவு உற்பத்தி செய்த பண்பாட்டு படிநிலையினையும் இணைத்து ஆராய வேண்டியதாகிறது. வேட்டையாடி உணவு உற்பத்தி செய்த இத்தகைய நிலையினர் எளிய வேளாண்மை செய்ய முற்பட்டனர்.ஆயினும், வேட்டைத் தொழிலைக் கைவடைவில்லை. அவர்கள் இட்ட பயிர்களைக் காக்கவே காட்டு விலங்ககளை வேட்டையாடினர். வேட்டை என்னும் நிலையிலிருந்து மாறி வேளாண்மையைக் காப்பதற்கான வேட்டையாக மாறிய சமூக சூழலைக் காணமுடிகிறது.

**சிறுதலைத் துருவின் பழுப்புஉறு விளைதயிர்**
**இதைப்புன வரகின் அவைப்புமாண் அரிசியோடு**
**குர்வாய்த்து ஒழிந்த ஈர்வாய்ப் புற்றத்து**
**ஈயல் பெய்துஅட்ட இன்புளி வெஞ்சோறு**
**சேதான் வெண்ணெய் வெம்புறுத்து உருக (அகம்.394,2-6)**

சிறிய தலையினையுடைய செம்மறியாட்டினது பழுப்பு நிறம் வாய்ந்த முற்றிய தயிரை உலை நீராக்கிப் புதுக் கொல்லயில் விளைந்த நன்கு குற்றிய வரகினது அரிசியை அதிற்போட்டு, மழை மிகுதியாக பெய்தமையால் புற்றிலிருந்து வெளிவந்து அழிந்த ஈயலையும் அதில் இட்டுச் சமைத்த இனிய புளிப்பையுடைய சோற்றில் கிடந்து உருகுமாறு பசுவின் வெண்ணெய்யை ஊற்றி நின் எவலர் உண்ட நிகழ்வை அறியமுடிகிறது. இவ்வாறே ஈயலை நன்கு புளித்த மோரில் ஊறப்போட்டுப் புளிங்கறி சமைத்து உண்டனர் (புறம்.119). இங்குப் புதுக்கொல்லை என்பது ஆரம்பகட்ட எளிய வேளாண்மையைக் குறிக்கிறது. தினையைக் கவர்ந்துண்டு அகப்பட்ட கானக்கோழியை நெருப்பிலிட்டுச் சுட்ட இறைச்சியுடன் சுட்ட ஆரல் மீனையும் பாணர் உண்டமை (புறம்.320). வேட்டை சிறுவர் கொணர்ந்த உடும்பின் தசை பெய்தது சமைக்கப்பெற்ற தயிரோடு கூடிய கூழினைப் பாணருக்கு

உண்ண கொடுத்தல் (புறம்.326). சிறுதினையை உண்ணவரும் புறா, இதல் முதலான பறவைகளைப் பிடித்துச் சமைத்தற்க இயலாதபடி பொழுது மறைந்து விட்டதால் பாணர்களுக்கு சுட்ட முயல்கறி தருதல் (புறம்.319). பறவைகளின் ஊனைத் தின்று புலால் நாற்றம் நாறுகின்ற மெல்லிய வாயினையும் வெள்ளிய பற்களையும் உடைய வேட்டுவர்களின் விருப்பத்திற்கு உரிய துணையாகிய சிறுவர்கள்(புறம்.324).

**முல்லைத்திணையுள் உணவு உற்பத்தி**

புறவு, வன்புலம், முல்லைநிலம் என்ற சொற்களால் குறிக்கப்பட்ட வானம் பார்த்த பூமி பரப்பில் கால்நடைகளை மேய்த்துப் பாதுகாத்து அவற்றிலிருந்து பெறப்பட்ட பால் பொருட்களை உண்டும் பண்டமாற்றுச் செய்தும் வாழ்ந்த குடியினர் கோவலர், ஆயர், அண்டர், இடையர் என்ற சொற்களால் குறிக்கப்பட்டார்கள். “கால்நடை சார்ந்ததெரு வாழ்க்கை ஒருபுறம் இருக்க, வன்புலங்களில், செம்மண்நிலங்களில், கொல்லை நிலங்களில் மழையை நம்பியே வரகு, அவரை, எள், கொள், பயறு வவசாயத்தை மேள்கொண்ட மற்றொர வாழ்க்கையும் இயங்கிக்கொண்டிருந்தது. கானக் குறவர் குடியின் மலைச்சாரல்களில் எரித்து உண்டாக்கி விளைவித்து விட்டுப் பின்னர் அதனை விடுத்து வேறு புதிய புனங்களை எரித்து உண்டாக்கித் தினை, ஐவன விவசாயம் செய்தது போல முல்லை நிலத்தைச் சேர்ந்த உழவர்கள் இடப்பெயர்ச்சி விவசாய முறையைப் பின்பற்றவில்லை.” (ராஜ் கௌதமன், பாட்டும் தொகையும் தொல்காப்பியமும் தமிழ்ச் சமூக உருவாக்கமும், ப.142).

**பேருரை தலைஇய பெரும்புலன் வைகறை**
**ஏர்இடம் படுத்த இருமறுப் பூழிப்**
**புறமாற பெற்ற பூவல் ஈரத்த**
**ஊன்கிழித் தன்ன செஞ்சுவல் நெடங்சால்**
**வித்திய மருங்கின் விதைபல நாறி (அகம்.194)**

ஏன்னும் அகநானூற்று பாடல் ஒரு நாள் இரவில் பெருமழை பெய்தது. நன்றாகப் புலர்ந்த காலைப் பொழுதில் எல்லோரும் தம் தம் நிலங்களில் ஏர் பூட்டி உழுதனர். அந்தச் செம்மண் நிலத்துப் புழுதி கீழ்மேலாக மாறிடுமாறு உழுதனர். ஏர் உழுத பின், பிளந்த செல்லப்பட்ட செம்மண், செந்நிறமான ஊனைக் கிழித்துச் சென்றது போல் தோன்றியது. அங்கு வரகு விதைக்கப்பட்டது. பல விதைகள் முளைத்த எழுந்தன. கோம்புடைய ஓலைக் குடையைத் தலையில் கவிழ்த்துக் கொண்ட கொல்லை உழவர்கள், பறையை முழக்கி ஒலியை எழுப்பிக் களைக் கொட்டினால் களையினைப் பறித்துப் புனத்தினைத் தூய்மை செய்தனர். இனக்குழுச் சமுதாய எச்சங்களைத் தாங்கிய சீறூர் மன்னர்களின் நிலப்பகுதியின் இயல்பை உரைக்கும் பாடலொன்று,

**கருங்கால் வரகேயிருங் கதிர்த் திணையே**
**சிறுகொடிக் கொள்ளே பொறிகிள ரவரையொ**
**டிந்நான் கல்ல துணாவு மில்லை (புறம்.335)**

என்னும் புறநானூற்று பாடலின் வழி வரகு, தினை, கொள், அவரை எனம் உணவு தானியங்களை அச்சமுதாயம் உற்பத்தி செய்து உணவு தேவையினைப் பூர்த்தி செய்ததை அறியமுடிகியது. வரகு விளையும் நிலமாய்ச் சீறூர் காட்டப்பட்டுள்ளது (புறம்.21,322). வரகு சங்க இலக்கியத்தில் முல்லை நில விளைபொருளாக காட்டப்பட்டுள்ளது. இதைப் புறநானூற்றின் சீறூர்மன்னர் பற்றிய வல்லாண் மல்லை, மூதின் முல்லைப் பாடல்கள் காட்டுகின்றன.

**முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்**
**கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்**
**குவளை உண்கண் குய்ப்புகை கமழத்**
**தான்துழந்து அட்ட தீம்புளிப் பாகர்**
**இனிதுஎனக் கணவன் உண்டலின்**
**நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே (குறுந்.167)**

முற்றிய தயிரைக் காந்தள் மலர் போன்ற தன் விரல்களால் பிசைகிறாள். உடனே விரலைத் தன் ஆடையில் துடைத்துக் கொண்டு அதைத் துவையாமலே, புளிக்குழம்பு வைத்துத் தாளிக்கிறாள். ஆடு மேய்த்துப் பராமரிப்பவர்கள் அன்று பொதுவாக இடைமகன், இடையன் என்றார்கள். இவர்கள் தங்கள் ஆட்டின் பாலைக் கறந்து வந்து உணவுக்கு மாற்றாக விற்ற நிகழ்வை

**பறியுடைக் கையர் மறியினத்து ஒழிய**
**பாலொடு வந்து கூழொடு பெயரும்**
**ஆடுடை இடைமகன் சென்னிச் (குறுந்.221)**

குறுந்தொகை விவரிக்கிறது. “வேளாண்மைக்குக் கால்நடைகளைப் பயன்படுத்தியதும், மேட்டுநிலப்பரப்பில் பேரளவு வேளாண்மை செய்ததும் முல்லைத்திணையில் நாம் ஏற்கெனவே பார்த்தபடி தந்தையாதிக்கத்தைக் கொண்டு வரும் சக்கிகளாக விளங்கின. இருத்தல் என்பது இந்நிலையில் உயிர்வாழ்தல் என்னு ஆகிவிட்டது. ஊண்மையாகவே இருத்தலுக்கப் புதிய பொருளும் புதிய முக்கியத்துவமும் இப்போது ஏற்பட்டது. வேளாண்மை செய்வதற்காகக் குடியிருப்பில் தங்கியிருந்த நிலை போய் கணவனுடைய வழிகாட்டுதல்படி பெண் இப்பொழுது அங்கே தங்கியிருக்கும் நிலை ஏற்பட்டது.” (கார்த்திகேசு சிவதம்பி, பண்டைத் தமிழ்ச் சமூகம் வரலாற்றுப் புரிதலை நோக்கி, ப.171) உலகளாவிய நிலையில் பார்க்கும்போது எந்த ஒரு சமூகமும் தனித்த ஒரு உணவாதார முறையை மட்டும் சார்ந்து வாழ்வதில்லை. நிலையானதொரு கிராம வாழ்வை ஏற்றுக்கொண்ட பின்னருங்கூட எண்ணற்ற சமூகங்கள் வேட்டையாடுதல், மீன்பிடித்தல், உணவு சேகரித்தல் முதலான பழைய உணவாதார முறைகளை விட்டுவிடாமல் புதிய ஆதாரங்களைத் தேட முற்பட்டனர். பயிரிடுதல் என்னும் ஒரு உற்பத்தி புரட்சி ஏற்பட்டபோது பயிரிடுதலுடன் கால்நடைகளின் பயன்பாடும் உணரப்பட்டது. அதனால் கால்நடை வளர்ப்பு உருவானது. விவசாயத்திற்கான முயற்சியில் புதிய தொழிற்கருவிகள் ஏற்படலாயின. தானியங்களைப் பாதுகாக்கும் அறிவும் சில எளிய முறைகளும் ஏற்பட்டன. இதனால் ஒரு நிலையான குடியிருப்பை ஏற்படுத்தி அங்கு வாழும் முறையும் உருவானது. பொருட்களின் எண்ணிக்கை பெருகப் பெருக ஓரிடத்தில் வாழ வேண்டி கட்டாயம் ஏற்பட்டது. இத்தகைய பண்பாட்டு விழுமியங்களின் துணையோடு சங்க இலக்கிய முல்லை நிலச்சமூகத்தின் பண்பாட்டில் ஒன்றான உணவு முறைகள் சேகரித்தல், உற்பத்தி செய்தல் என்னும் இருநிலைகளில் சிறப்புறுகின்றன.

**கலித்தொகை காட்டும் இடையர்கள்**

சங்க இலக்கியம் எட்டுத்தொகை என்றும் பத்துப்பாட்டு என்றும் பாகுபடுத்தப் பெற்றுள்ளது. இவை அனைத்தும் சங்க இலக்கியம் எனச் சுட்டப்பெறினும் அந்நூல்கள் ஒரே காலகட்டத்தில் எழுதப்பெற்ற நூல்கள் அன்று. இதற்கான காரணங்களை ஆய்வாளர்கள் குறிப்பிட்டுச் சென்றுள்ளனர். (செல்வராசு.,அ, சங்க இலக்கியத்தில் குடிமக்களும் தலைமக்களும், பக். 3-4) இந்நூல்களில் இடம்பெற்றுள்ள முல்லைத்திணைப் ஆய்வுக்கு உட்படுத்திப் பார்க்கும்பொழுது வேறுபாடு இடம்பெற்றுள்ளதை அறிந்துகொள்ள முடிகின்றது. குறிப்பாக, கலித்தொகை தவிர்த்த பிற முல்லைத்திணைப் பாடல்கள் அனைத்திலும் ஆடுமாடு மேய்க்கும் இடையர்கள் தலைவர்களாக வைக்கப்பெறவில்லை. ஆனால் கலித்தொகையில் இடம்பெற்றுள்ள முல்லைக்கலியில் கால்நடை மேய்ப்போர்தான் தலைவர்களாக வைத்துப் பாடப்பெற்றுள்ளனர்.

**ஏறுதழுவும் இடையர்கள்**

எட்டுத்தொகை நூல்களில் கலித்தொகையில் உள்ள முல்லைக்கலியில் மட்டுந்தான் ஏறுதழுவும் இடையர்களைப் பார்க்கமுடிகிறது. ஏறுதழுவுதல் தமிழர்களின் வீரவிளையாட்டு என்று இன்று கூறப்பெறினும் அது இடையர் இனத்திற்கே உரிய தனி விளையாட்டாக இருந்ததை முல்லைக்கலியில் காணலாம். இடையர் குலத்தில் பெண் குழந்தை பிறந்துவிட்டால் குழந்தையோடு சேர்த்து ஒரு காளைமாடும் வளர்க்கப் பெற்றுள்ளது. பெண் திருமணப் பருவம் அடையும்பொழுது அவள்வீட்டில் வளர்க்கப்படும் காளை மாட்டை யார் அடக்குகிறார்களோ அவர்களுக்கே பெண்கொடுக்கும் வழக்கம் இருந்துள்ளதை முல்லைக் கலியில் காண

முடிகிறது. ஏறுதழுவும் விளையாட்டு ஒருவகையில் மணமகனைத் தேர்ந்தெடுக்கும் விளையாட்டாகவும் இருந்துள்ளது. ஏறு தழுவுதலில் ஆயர் இளைஞர்கள் மட்டுமே ஈடுபட்டுள்ளனர். ஏறுதழுவ அஞ்சும் இளைஞனை ஒரு பெண் மறுபிறவியிலும் விரும்பமாட்டாள் என்பதை,

**"கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும்**
**புல்லாளே, ஆய மகள்"** (கலி.முல்.கலி, பா.3)

என்ற தொடர் விளக்கியுள்ளது.

அதேபோல, ஆயர் மகளிரைத் திருமணம் முடித்துக்கொடுப்பதற்கு அந்த இனத்தார் முலைவிலை பெறுவதில்லை. மாறாக, ஆடவன் ஏறுதழுவுதலையே விரும்புவர் என்பதை,

**"விலைவேண்டார், எம்மினத்து ஆயர் மகளிர்**
**கொலையேற்றுக் கோட்டிடைத் தாம்வீழ்வார் மார்பின்**
**முலையிடைப் போலப் புகின்"** (கலி.முல்.கலி, பா.3)

என்ற பாடலடிகள் குறிப்பிட்டுநிற்கின்றன.

ஏறுதழுவும் இடையர் மட்டுமல்லாமல் கால்நடை மேய்ப்போரின் காதல்வாழ்க்கைப் பற்றியும் முல்லைக்கலிப்பாடல்கள் விளக்கிப் பேசியுள்ளன. இங்குச் சுட்டப்படவேண்டிய செய்தி இடையர் இனத்தார் வீரர்களாகவும் போர்மறவர்களாகவும் இருந்துள்ளனர் என்பதே ஆகும். சங்க இலக்கியத்தை அடிப்படையாகக்கொண்டு பார்க்கும்பொழுது இடையர் இனத்தார் இனக்குழுத் தலைவர்களாக இருந்து ஆட்சிசெய்துள்ளனர் என்பதையும் அறியமுடிகிறது.

**இடையர் இனமும் இனக்குழு வாழ்க்கையும்**

முல்லைக்கலி தவிர்த்த பிறநூல்களில் போர்மேற் செல்லும் தலைவர்கள் பாட்டுடைத் தலைவர்களாகக் குறிப்பிடப் பெற்றுள்ளனர். இவர்கள் தாமே போர்மேற் சென்றவர்களாகவும், பிறருக்குத் துணையாகப் போர்மேற் சென்றவர்களாகவும் சுட்டப்பெற்றுள்ளனர். என்றாலும் இவர்கள் தங்களை அரசப் பரம்பரையினராக எங்கும் கூறிக்கொள்ளவில்லை. ஆனால், முல்லைக்கலியில் காட்டப்பெற்றுள்ள இடையர்கள் தங்களைப் பாண்டியர் பரம்பரையில் வந்தவர்களெனக் கூறிக்கொள்கின்றனர். அத்தோடு, பாண்டிய மன்னரை அவர்கள் வாழ்த்தியும் பாடியுள்ளனர். 'மாசற்ற அழகிய கடலிடத்தே பரந்து கிடக்கின்ற பழைய நாட்டை, ஆளும் உரிமையோடு வந்து ஆட்சிசெய்கின்ற எங்கோமானான பாண்டியன், இந்த அகன்ற உலகிலே என்றென்றும் நிலைபெற்று வாழ்வானாக' (மேலது, பா.4) என்று முல்லைக்கலிப் பாடல் ஒன்று பாண்டிய மன்னனை வாழ்த்திப்பாடுகின்றது. மற்றொரு பாடல், முன்பு ஒருமுறை கடல்பொங்கி எழுந்தது. அது பாண்டிய நாட்டை விழுங்கியது. ஆனாலும், பாண்டியன் தளர்ச்சி அடையவில்லை. தன் நாட்டினை விரிவாக்கும்பொருட்டு சேர, சோழ நாடுகளை வென்று அவற்றின் பகுதிகளைத் தனதாக்கிக்கொண்டு நாட்டை விரிவுபடுத்திக்கொண்டான். தான் வென்ற பகுதிகளில் இருந்த புலி, வில் கொடிகளைப் போக்கி அங்கெல்லாம் கயல்கொடிகளைப் பறக்கச்செய்தான். தன் ஆற்றலினால் இயற்கையின் கொடுமையையும் வென்றுவிட்ட வாடாத பெருமையுடையவன் தென்னவன். அவனது பழைய புகழை நிலைநிறுத்திய குடி ஆயர்குடியாகும் (மேலது, பா.5) என்கிறது.

**முடிவுரை**

சங்க இலக்கியச் சான்றுகளைவைத்துப் பார்க்கும்பொழுது ஆயர் இனத்தார் அல்லது இடையர் இனத்தார் பாண்டிய பரம்பரையைச் சார்ந்தவர்கள் என்பது தெளிவாகிறது. இதே இனத்தைச் சார்ந்தவர்கள் சிலர் இனக்குழுத் தலைமை ஏற்று ஆட்சிசெய்தையும் சங்க இலக்கியத்தின்வழி அறியமுடிகிறது.

**பார்வை நூல்கள்**

[1] நச்சினார்க்கினியர்(உரை), கலித்தொகை, கழக வெளியீடு, சென்னை. பதி. 1978.

[2] கார்த்திகேசு சிவதம்பி, பண்டைத் தமிழ்ச் சமூகம் வரலாற்றுப் புரிதலை நோக்கி, மக்கள் வெளியீடு(2003)

[3] கதிர் முருகு(உரை), பெரும்பாணாற்றுப்படை, சாரதா பதிப்பகம், சென்னை, பதி.2009.

[4] கணியன் பாலன்,பழந்தமிழ்ச் சமுதாயமும் வரலாறும், எதிர் வெளியீடு(2016)

[5] பக்தவதசல பாரதி, இலக்கிய மானிடவியல், அடையாளம்(2012)

[6] பக்தவதசல பாரதி, பண்பாட்டு மானிடவியல், மெய்யப்பன் பதிப்பகம்(2009)

[7] பக்தவதசல பாரதி,மானிடவியல் கோட்பாடுகள், அடையாளம் (2012)

[8] புலியூர் கேசிகன், (உரை), நற்றிணை, உமா பதிப்பகம், சென்னை, 2018.

[9] தமிழண்ணல்(உரை), கநற்தொகை, முல்லை நிலையம், சென்னை, பதி.2002.

[10] தமிழண்ணல், சுப. அண்ணாமலை (உரை), அகநானூறு, கோவிலூர் மடாலயம், கோவிலூர்.

[11] திவாகர நிகண்டு,

[12] செல்வராசு.,அ. சங்க இலக்கியத்தில் குடிமக்களும் தலைமக்களும், பக். 50 – 51

[13] லோகநாதன்.,C.P., வரலாற்றில் யாதவர்கள்

[14] வில்லிபுரம் மகேஸ்வரன், சோழர் காலத்துக் கோயிலும் சமூகமும்,

[15] ராஜ் கௌதமன், பாட்டும் தொகையும் தொல்காப்பியமும் தமிழ்ச் சமூக உருவாக்கமும், தமிழினி பதிப்பகம்

[16] Adamson E.Hoebal, Man in Primltive World, Hill Book Company, New York (1949)

**ஆசிரியர் குறிப்பு**



**முனைவர் பீ.பெரியசாமி,**
*தமிழ்த்துறைத்தலைவர்,*
*டி.எல். ஆர். கலை மற்றும் அறிவியல் கல்லூரி,*
*விளாப்பாக்கம், இராணிபேட்டை மாவட்டம் -632521.*
*தமிழ்நாடு, இந்தியா.*